ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் அன்னை தமிழுக்கு இருக்கை ஏற்படுத்த

# வேலம்மாள் கல்வி குழுமம் சார்பில் ரூ.25 லட்சம் நிதி

## ● அமைச்சர் க.பாண்டியராஜனிடம் வழங்கினார் எம்.வி.முத்துராமலிங்கம்

■ சென்னை

தமிழுக்கு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இருக்கை ஏற்படுத்தும் வகையில், வேலம்மாள் கல்விக் குழுமம் சார்பில் அதன் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம், அமைச்சர் க.பாண்டியராஜனிடம் ரூ.25 லட்சம் நிதி வழங்கியுள்ளார்.



▲ வேலம்மாள் கல்விக் குழுமம் சார்பில் ரூ.25 லட்சத்துக்கான நன்கொடையை அமைச்சர் க.பாண்டியராஜனிடம் வழங்குகிறார் அதன் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம். அருகில் முனைவர் ஆறுமுகம்.

### தமிழ்மொழிக்கு இருக்கை

உலகத் தர வரிசையில் முதலிடத்தில் இருக்கிறது 350 ஆண்டுகள் பழமையான ஹார்வர்டு பல்கலைக்கழகம். அதில் பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ்மொழிக்கு இருக்கை ஏற்படுத்துவதற்காக ரூ.40 கோடி நிதி திரட்டும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

உலகம் முழுவதும் இருந்து தமிழ் ஆர்வலர்கள் தொடர்ந்து நிதியளித்து வருகின்றனர். சமீபத்தில் தமிழக அரசு சார்பில் முதல்வர் பழனிசாமி ரூ.10 கோடியும், கனடாவில் ஏ.ஆர்.ரஹ்மான் இசை நிகழ்ச்சி நடத்தியதன் வாயிலாக 'ஆர்யா கனடா' நிறுவனம், ரஹ்மான் முன்னிலையில் ஹார்வர்டு தமிழ் இருக்கைக்கு 25 ஆயிரம் டாலரும் நிதியுதவி வழங்கினர்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் இருந்தும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று 'ஹார்வர்டு தமிழ் இருக்கை இன்க்' (Harvard Tamil Chair Inc) என்ற அமைப்பு வலியுறுத்தி வந்தது. அதனை ஏற்று மதுரையைச் சேர்ந்த எம்.வி.முத்துராமலிங்கம், வேலம்மாள் கல்விக் குழுமம் சார்பில் ரூ.25 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். சென்னையில் உள்ள அவரது இல்லத்தில், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் இந்த நிதியைப் பெற்றுக்கொண்டார். அப்போது முனைவர் ஆறுமுகம் உடனிருந்தார்.

இதுகுறித்து எம்.வி.முத்துராமலிங்கம் கூறியது: தமிழ் இருக்கை இன்க் அமைப்பின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களில் ஒருவரான முனைவர் ஆறுமுகம், ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து அடிக்கடி எடுத்துரைப்பார். 'இந்திய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், உலக அளவில் தமிழ் மொழிக்கான அங்கீகாரம் போதிய அளவில் கிடைக்கவில்லை. பன்னாட்டு ஆய்வாளர்களைக் கவர முடியாததும், உலகத்தரம் வாய்ந்த ஆய்வுகள் போதிய அளவில் தமிழில் மேற்கொள்ளப்படாததுமே இதற்கான முக்கிய காரணங்கள். பன்னாட்டு அளவில் முதன்மையான பல்கலைக்கழகங்களில் தமிழைக் கற்கவும், ஆய்வு செய்யவும் வாய்ப்பு ஏற்படும்போது இந்தப் போதாமைகள் சீர்செய்யப்படலாம்' என்று அவர் சொல்ல எனக்கு இதில் ஆர்வம் ஏற்பட்டது.

'தி இந்து' தமிழ் நாளிதழிலும் இதுபற்றி தொடர்ந்து செய்திகள் வெளிவருவதைக் கவனித்தேன். தமிழக அரசே ரூ.10 கோடி நிதி வழங்கியிருப்பதைத் தொடர்ந்து, நானும் நிதி வழங்கியிருக்கிறேன் என்றார்.

அமைச்சர் க.பாண்டியராஜன் கூறும்போது, 'தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தபடி, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த ஆட்சி எடுத்து வருகிறது. வேலம்மாள் கல்விக் குழுமத்தைப் பாராட்டுகிறேன். இதேபோல இதர கல்விக் குழுமங்களும், கல்வியாளர்களும் இந்த நல்ல விஷயத்தில் கைகோர்க்க வேண்டும்' என்றார்.

### நன்கொடை செலுத்துவது எப்படி?

நன்கொடைகளை நேரடியாகச் http://harvardtamilchair.com என்ற இணையதளத்தின் வழியாக செலுத்தலாம். அவ்வாறு செலுத்திய விவரத்தை harvardtamil@thehindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரியப்படுத்தினால் 'தி இந்து' நாளிதழிலும் செய்தி வெளியிடப்படும்.